இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 165 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 12 – திங்கள்கிழமை 26 ஜனவரி 2026 – மதுரை ★★ 16+12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 165 : Thiruvalluvar Year - 2057 - Thai 12 - Monday 26 January 2026 - Madurai ★★ 16+12 Pages ₹ 5.00

## சாதனைக்கு மேல் சாதனை! மக்கள் முடிவு செய்துவிட்டார்கள்! நாங்கள்தான்

# மீண்டும் வருவோம்! மீண்டும் வெல்வோம்!

## சட்டப்பேரவையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணித்தரமான பதிலுரை!

**சென்னை, ஜன. 26 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது "சாதனைக்கு மேல் சாதனைகளை நிகழ்த்தியதால் மக்கள் முடிவு செய்துவிட்டார்கள், நாங்கள்தான் மீண்டும் மீண்டும் வருவோம்! மீண்டும் மீண்டும் வெல்வோம்" என்று ஆணித்தரமாகக் கூறினார்.**



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.01.2026) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றினார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பதிலுரை வருமாறு:-

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆறாவது முறையாக வெற்றி பெற்றபோது, ஒரு பக்கம் மகிழ்ச்சி இருந்தாலும், இன்னொரு பக்கம் எனக்குக் கவலையும் இருந்தது, அதை நான் மறைக்க விரும்பவில்லை. இந்தப் பொறுப்பை நான் எப்படிச் செய்யப் போகிறேன்? வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா? மக்கள் விரும்பக்கூடிய வகையில் ஆட்சி நடத்த முடியுமா? மக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில ஆட்சி நடத்த முடியுமா? என்ற கவலைதான் எனக்கு இருந்தது.

முந்தைய பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு அனைத்து வகையிலும், அனைத்துத் துறைகளிலும் மிக மோசமான பின்னடைவைச் சந்தித்து, மோசமான நிலையை அடைந்திருந்தது. அதை சரி செய்தாக வேண்டும். அடுத்து, நமக்கு மேலிருக்கக்கூடிய ஒன்றிய அரசு அது ஒத்துழைக்காத, ஒரு ஓரவஞ்சனை அரசாக இருந்தது. இந்த இரண்டு நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டுமென்பதுதான் எனது கவலைக்கு மிக முக்கியமான காரணங்கள். இடியாப்பச் சிக்கல் என்று சொல்வார்களே, அப்படியான சூழலில்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். அதனால்தான் கவலை கொண்டவனாக நான் இருந்தேன்.

### தமிழ்நாடு தலைநிமிர்ந்துவிட்டது!

ஆனால், இப்போது 5 ஆண்டுகள் கடந்த நிலையில் நான் சொல்கிறேன்; நான் மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லவேண்டுமென்றால் மிக, மிக, மகிழ்ச்சியாக இருக்கின்றேன். என்னுடைய மகிழ்ச்சிக்குக் காரணம் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். என்னுடைய இலக்கில் நான் வென்றுவிட்டேன். திராவிட மாடல் அரசின் சாதனைகளால் தமிழ்நாடு தலைநிமிர்ந்துவிட்டது. மக்கள் மனநிறைவு அடையக்கூடிய வகையில் ஆட்சியை வழங்கிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட அதிகம் வளர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் மற்ற மாநிலங்கள் எல்லாம் தமிழ்நாட்டை அண்ணாந்து பார்க்கின்றார்கள். அதற்கு காரணம் நம்முடைய திட்டங்கள், நாம் செய்து கொண்டிருக்கக் கூடிய சாதனைகள், இவையெல்லாம் தான் என் மகிழ்ச்சிக்குக் காரணம்.

> ### ஒவ்வொரு நாளும் மக்களுக்காக வாழ்ந்து தமிழ்நாட்டை வளர்த்தெடுக்கிறேன்!
>
> 
>
> **"கடந்த 5 ஆண்டுகளில், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ன செய்தான் என்றால், ஒவ்வொரு நாளும் மக்களுக்காக வாழ்ந்தான்! (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்காக திட்டங்களைத் தீட்டினான்! (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தமாக தமிழ்நாட்டை வளர்த்தெடுத்தான்! (மேசையைத் தட்டும் ஒலி) இவையெல்லாம் வெறும் புகழ்ச்சி இல்லை; எல்லாமே உண்மை! இதை எதிர்க்கட்சிகளால் தாங்கிக் கொள்ள முடியாது என்பதையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது."**

**அடுத்து, இன்னும் பெருமையுடன், கான்ஃபிடன்டா சொல்கிறேன். நாங்கள் அமைக்கப் போகும் திராவிட மாடல் 2.0 ஆட்சி, எங்கள் சாதனைகளை நாங்களே விஞ்சும் அளவிற்கு இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி செய்திருக்கக்கூடிய ஐந்தாண்டுகள், வரப்போகும் ஒளிமயமான எதிர்காலத்தை உணர்த்துவதாக அமைந்திருக்கிறது.** (மேசையைத் தட்டும் ஒலி)

### விடியல் ஆட்சியின் மாபெரும் சாதனைத் திட்டங்கள்!

ஆறாவது முறை ஆட்சியமைந்தபோது, அது விடியல் ஆட்சியாக அமையுமென்று சொன்னோம். அந்த விடியலை ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) கோடிக்கணக்கான மக்கள் மனங்களிலும், முகங்களிலும் மகிழ்ச்சியையும், மனநிறைவையும் நான் பார்க்கின்றேன். அப்படிப்பட்ட விடியல் ஆட்சியின் மாபெரும் சாதனைத் திட்டங்களில் முக்கியமான சிலவற்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

தொடர்ச்சி 3- ஆம் பக்கம்

## கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலை! கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை!

# இன்று - தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, ஜன. 25 -**

**இன்று (26.01.2026 - திங்கட்கிழமை) தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலையில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுகிறது என தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

இதுகுறித்து தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மகளிர் மேம்பாட்டுக்கென தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து, 1.31 கோடி மகளிருக்கு 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை', 'விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்', கல்வி கற்கும் மாணவிகளுக்கு 'புதுமைப் பெண் திட்டம்', வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான 'தோழி விடுதி', இந்தியாவிலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், கடந்த 29.12.2025 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், "பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ" என்று சொல்லத்தக்க வகையில், "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு கறுப்பு சிகப்பு மகளிர் அணி படையின் மாபெரும் எழுச்சியோடு வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து;

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட - கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் முன்னிலையில், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருச்சி சிவா, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் அணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் பங்கேற்பில்;

வருகிற ஜனவரி 19 அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு இன்று (26.01.2026 திங்கட்கிழமை) மாலை 4.00 மணி அளவில் நடைபெறும்.

மாவட்டக் கழகச் செயலாளர் / பொறுப்பாளர்களான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, சி.வி.கணேசன், பூண்டி கே.கலைவாணன், எம்.எல்.ஏ., காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., க.வைரமணி, க.அன்பழகன் எம்.எல்.ஏ., வீ.ஜெகதீசன், நிவேதா முருகன் எம்.எல்.ஏ., கே.கே.செல்லபாண்டியன், என்.கௌதமன், டி.பழனிவேல் அமைச்சர் பெருமக்களான கோவி.செழியன், சிவ வீ. மெய்யநாதன், டி.ஆர்.பி.ராஜா - நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கல்யாணசுந்தரம், அருண்நேரு எம்.பி., முரசொலி எம்.பி. மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இம்மாநாட்டினை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்வார்கள்.

நிறைவாக, தஞ்சாவூர் மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், எம்.எல்.ஏ., அவர்கள் நன்றியுரையாற்றுகிறார்.

இவ்வாறு தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இன்று மகளிர் அணி மாநாடு நடைபெறுகிறது.